மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவசியம் இருந்தால் நாம் இங்கேயிருந்து சொல்ல வேண்டியதில்லை. அவர்களே செய்வார்கள். ஒருவேளை உங்களுக்கு அவசியமாக இருக்குமானால் நீங்கள் தனியாக கடிதம் எழுதிக் கொடுத்தால் அதுபற்றி நடவடிக்கையெடுக்கச் சொல்லலாம்.

தமிழகத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்கு இ. கார்டு வழங்கல்.

378—(*வினா எண் 9522) திரு. சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பிளஸ்-1-லிருந்து கல்லூரி வரை பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு இ. கார்டு (எலிஜிபிலிடி கார்டு) மீண்டும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஆர். கணபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் அது பரிசீலனை செய்யப்படுமா? தமிழ் நாட்டில் எத்தனை மாணவர்களுக்கு இதுவரையில் இது வழங்கப்பட்டது என்பதையும், மேலும் விரிவுபடுத்துகிற திட்டம் பரிசீலனையில் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, எலிஜிபிலிட்டி கார்டை பொறுத்தவரையில் ஆதி திராவிட மாணவர்கள், கல்லூரியில், பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது அவர்கள் ஸ்காலர்ஷிப் வாங்குவதற்கும், பீஸ் கட்டாமல் படிப்பதற்கும் முன்னாலே கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது கல்லூரி நிர்வாகத்தைப் பொறுத்து பிரின்சிபாலிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் அந்தக் கல்லூரியில்

1987 ஏப்ரல் 10]

சேருகிறபோது அப்ளிகேஷனில் கம்யூனிட்டி சர்டிபிகேட் காளத்தையும், இன்கம் சர்டிபிகேட் காளத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் காளத்தில் அவர்கள் கையெழுத்து வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். அப்படி கொடுக்கிறபோது அதைப் பார்த்து அவர்களை கல்லூரியில் சேர்த்துக் கொள்கிற சூழ்நிலையில் அவர்கள் பணம் கட்டுகிற சூழ்நிலை ஏற்படுவதில்லை. ஆகவே 'இ. பார்மை' திரும்பக் கொண்டு வருகிற சூழ்நிலையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை.

திரு. கே. ஆர். கணபதி: தலைவர் அவர்களே, அவ்வாறு அந்த கம்யூனிட்டி சர்டிபிகேட், பணச் சர்டிபிகேட் வாங்குகிறபோது ஆண்டு வருமானம் 3,600 ரூபாய்க்கு உட்பட்டிருந்தால்தான் அந்தத் தகுதி உண்டு என்று சொல்லப்படுகிறது. இந்த ஆண்டு வருமானத்தை உயர்த்த அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை எதுவும் இல்லை. அப்படிப் பிரச்னை இருக்குமானால் அரசு நடவடிக்கையெடுக்கும்.

1984-85-ல் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைக்கு ஒதுக்கப்பட்ட தொகை.

379—(* வினா எண். 11000) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக நிலங்களை கையகப்படுத்த 1984-85 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984-85 ஆம் ஆண்டில் வீட்டுமனை வழங்குவதற்காக ரூ. 125 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

(ஆ) ரூ. 115.91 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.